DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | விஜயகுமார் | Caste | : | |
| Father Name | : | ராஜேந்திரன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **30.01.2026.**

**PW - 17**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுக்கா, நெட்டவிலாம்பட்டியில் குடியிருக்கிறேன். எரகுடி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு எதிர்புறம் அன்னை உணவகம் என்ற பெயரில் பாஸ்ட்புட் கடை வைத்துள்ளேன். எனது கடைக்கு அருகே விஏஓ அலுவலகம் உள்ளது. ஆஜர் 1 முதல் 6 எதிரிகளை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன கார்த்திக் என்பவரை தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)*

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அதில் கடந்த 25.05.2019 அன்று காலை 08.30 மணியளவில் நான் கடையிலிருந்தேன்

என்றும், அப்போது எரகுடி உப்பிலியர் தெருவை சேர்ந்த கார்த்திக் காரை ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தில் சென்ற சிதம்பரம் என்பவரை இடித்துவிட்டு நிற்காமல் சென்றார் என்றும், அந்த காரை கிருஷ்ணமூர்த்தியும், கிருஷ்ணனும் துரத்தி சென்றார்கள் என்றும், பின்னர் கார்த்திக்கை காருடன் எரகுடி விஏஓ அலுவலகம் முன்பு பிடித்து வந்து எதிரிகள் அனைவரும் சேர்ந்து சிதம்பரத்தின்மீது மோதி விட்டு எப்படி நிற்காமல் செல்லலாம் என்று அடித்து தாக்கினார்கள் என்றும், கார்த்திக்கின் அண்ணன் பாலமுருகனும், அவரது பெற்றோரும் எதிரிகளிடம் கெஞ்சினார்கள் என்றும், பிறகு அன்று மதியம் எரகுடி வீரப்பன் வாழைத்தோட்டம் அருகே உள்ள சமாதி அருகே கார்த்திக் இறந்துகிடந்ததாக கேள்விபட்டேன் என்றும், பிறகு வரதராஜனை தவிர மற்ற எதிரிகளை போலிசார் கைது செய்ததாக கேள்விபட்டேன் என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.